GURUDEV

# சுராணா கார்பரேஷன் லிமிடெட்

surana
Creating Values

முகவரி: எண் 29, ஒயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600014

## பொது அறிவிப்பு

என்னுடைய கட்சிக்காரர் M/s சுராணா கார்பரேஷன் சார்பில் கீழ்வரும் பொது அறிவிப்பை நான் வெளியிடுகிறேன்.

சில பத்திரிக்கைகள் மற்றும் தொலைக்காட்சிகளில் சுராணா கார்பரேஷனுக்கும் MMTC நிறுவனத்திற்கும் நடந்த வியாபார பரிவர்த்தனைகள் பற்றியும், அதன் விளைவாக CBI, ACB சென்னை நடவடிக்கைகள் எடுத்ததாக பதிவு செய்திருக்கும் முதல் தகவல் அறிக்கை பற்றியும் செய்தி வெளியிட்டிருக்கின்றது. இதில் கூறியுள்ளது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று என் கட்சிக்காரர்கள் மறுக்கிறார்கள். உண்மை நிலை கீழ்க்கண்டவாறு உள்ளது.

1. இந்தியாவின் மூன்று பங்குச்சந்தைகளில் வர்த்தகம் செய்யப்படும் பங்குகளைக் கொண்ட சுராணா நிறுவனத்தின் 2011-12 ஆண்டு மொத்த விற்பனை ரூ. 8666 கோடிக்கும் மேலாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ மத்திய அரசுக்கு கலால் வரியாக ரூ. 209.62 கோடியும் மாநில அரசுக்கு விற்பனை வரியாக ரூ. 137.81 கோடியும் செலுத்தி உள்ளது.
2. மேலும் சுராணா நிறுவனம் சிக்மாவினால் 'A' தகுதி பெற்றது. இதற்கு ISO-9001:2008 தகுதிச்சான்றும் பெற்றுள்ளது.
3. சீல் செய்யப்பட்டுள்ள தங்கம் மற்றும் தங்க ஆபரணங்கள் எல்லாமே வர்த்தகத்தில் வங்கிகளுக்கு ஸ்டாக் in டிரேட் ஆக வைக்கப்பட்டு, முற்றிலும் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.
4. ஏனைய MMTC, STC, வங்கிகள் போல் சுராணா கம்பெனியும் இந்திய அரசின் வர்த்தக அமைச்சகத்தினால் 'Nominated Agency' ஆக 2010 முதல் நியமிக்கப்பட்டு தங்கம் இறக்குமதி, ஏற்றுமதி செய்து வருகிறார்கள்.
5. சுமார் 14 மாதங்களுக்கு முன்பாகவே ஆரம்பிக்கப்பட்ட MMTC யுடன் கணக்கு சரிபார்ப்பு இன்னமும் முடியவில்லை. MMTC யின் படி சுராணா ரூ. 18 கோடி பணம் தரவேண்டும். ஆனால் சுராணாவின் கணக்கு நிலவரப்படி MMTC ரூ. 8.99 லட்சங்கள் கொடுக்க வேண்டும். இந்த விஷயம் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு MMTC க்கு எதிராக தடைஉத்தரவும் பெறப்பட்டுள்ளது. ஆதலால் இந்த விவகாரம் 'Sub Judice' நிலையில் நீதிமன்றத்தில் உள்ளது.
6. அனைத்து ஆவணங்களையும் எனது கட்சிக்காரர் நீதிமன்றத்தில், MMTCக்கு தரவேண்டியது இல்லை என தாக்கல் செய்து தங்கத்தின் மீது வைத்துள்ள சீலை அகற்றுவதற்கும் பணம் ரூ. 2.39 கோடி மற்றவைகளை திரும்ப வழங்கக் கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது.
7. எனது கட்சிக்காரர் MMTCக்கு எந்தவித பணம் தரவேண்டியது இல்லை ஆனால் சிவில் விவகாரம் கிரிமினல் வழக்காக மாற்றப்பட்டுள்ளது.

சரியான விபரங்களையும் உண்மை நிலையையும் பொதுமக்களுக்கு மறைத்து சில பத்திரிக்கைகள் மற்றும் தொலைக்காட்சிகள் வெளியிட்ட செய்திகளினால், உண்மை நிலையையும் சரியான விவரங்களையும் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இந்த பொது அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**P. KRISHNAN, ADVOCATE, Flat No. 9, 2nd Flr, No.259, Kilpauk Garden Road, Kilpauk, Chennai -10.**